கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணுல் சுருக்கப்பட்ட நாளாந்தக்கூலி வீதங்கள் நெல்துறையில் 6 சதவீதமும், கட்டிடவாக்கத்துறையில் 8 சதவீதமும் கொண்ட ஒரு உண்மை அதிகரிப்பைக் காட்டின.

**வர்த்தகம்**

1977 இன் பிற்பகுதியிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட பொருளாதார மீளமைப்புக்கள் வர்த்தகத்தில் மிகப் பெரும் விரிவொன்றினை எதிர்நோக்கியது. மீளாய்வின் கீழான ஆண்டில் இறக்குமதிகளும், ஏற்றுமதிகளும் மொத்தத் தேசிய உற்பத்தியில் முறையே 46 சதவீதமாயும் 27 சதவீதமாயும் உயர்ந்து காணப்பட்டன. இவை 1977 இன், முறையே 17 சதவீதத்துடனும், 19 சதவீதத்துடனும் ஒப்பிடத்தக்கன. 1981 இல் இறக்குமதிகளினதும் ஏற்றுமதிகளினதும் அமைப்பில் காணப்பட்ட மாற்றங்கள் வர்த்தகத்தை அபிவிருத்தியின் முக்கியமான கருவியாக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட கொள்கைகளின் ஆரம்ப வெற்றியில் மேலுமொரு வலுவைக் காட்டின. வெளிநாட்டு மூலங்களிலிருந்து ஓரளவிற்கு நிதியிடப்பட்ட விரைவுபடுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஆதரவளிக்குமுகமாக தொடக்கத்திலேற்பட்ட சடுதியான அதிகரித்த இறக்குமதிகளின் பின்னர் ஏற்றுமதித்துறையில் விரைவான விரிவும் இறக்குமதிகளில் படிப்படியான வீழ்ச்சியும் ஏற்படுமென கொள்கைமீளமைப்புக்கள் எதிர்நோக்கின. எதிர்பார்க்கப்பட்டபடி ஏற்றுமதிகள் 1980 இன் மிக உறுதியான சிஎஉ நியதிகளில் 8சதவீதமாகக்காணப்பட்டதுடன் ஒப்பிடின் 1981 இல் 11 சதவீதமாக விரைவான வீதத்தில் வளர்ச்சியடைந்த வேளையில் மறுபுறத்தில் 1980 இல் 41 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்த இறக்குமதிகளின் வளர்ச்சிவீதம் 1981 இல் சிஎஉ நியதிகளில் சிறிதளவுக்குமாறுன வளர்ச்சியைக் காட்டின.

அட்டவணை 1.23

**வர்த்தக நிலுவை 1979 — 1981**

பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில்
(சி.எ.உ. பத்து இலட்சம் அடைப்புக் குறிக்குள்)

| ஆண்டு | இறக்குமதிகள் (அ) | | ஏற்றுமதிகள் (இ) | | வர்த்தக நிலுவை | |
|---|---|---|---|---|---|---|
| | சுங்கம் | சீராக்கப்பட்டது | சுங்கம் | சீராக்கப்பட்டது | சுங்கம் | சீராக்கப்பட்டது |
| 1979 | 22,560<br>(1,121) | 22,541<br>(1,120) | 15,273<br>(759) | 15,279<br>(759) | — 7,287<br>(—362) | —7,262<br>(—361) |
| 1980 | 33.637<br>(1,563) | 33,942<br>(1,577) | 17,273<br>(803) | 17,595<br>(818) | —16,364<br>(—761) | —16,347<br>(—760) |
| 1981 | 34,585<br>(1,526) | 35,251 (ஆ)<br>(1,555) | 19,740<br>(871) | 20,585<br>(908) | —14,845<br>(—655) | —14,666<br>(—647) |

(அ) தங்கக் கட்டிகளும் நாணயங்களும்நீங்கலாக
(ஆ) சுங்க அறிக்கைகளில் பதிவு செய்யப்படாத வான்கல இறக்குமதிப் பெறுமதியான ரூ 3745 இலட்சங்களை (ஏறத்தாழ சிஎஉ 170 இலட்சம்) உள்ளடக்கும்,
(இ) மீள் ஏற்றுமதிகளை உள்ளடக்கும்.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
உணவு ஆணையாளர் திணைக்களம்
இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனம்
பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனம்

எனினும் வர்த்தக நிலுவை எதிர்பார்க்கப்பட்டவாறு 1981 இலும் பற்றாக் குறையொன்றினைப் பதிவு செய்தது. சுங்கத் தரவுகளின்படி 1981 இல் இறக்குமதி களின் மீதான மொத்தச் செலவினம் ரூ. 345,850 இலட்சமாகவும் (சிஎஉ 15.260 இலட்சம்) ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ரூ. 197,400 இலட்சமாயும் (சிஎஉ 8,710 இலட்சம்) விளங்கின. இதன் விளைவாக வர்த்தகப் பற்றாக்குறை, முன்னைய ஆண்டின் வர்த்தகப் பற்றாக்குறையான ரூ. 163, 640 இலட்சத்தினைவிட (சிஎஉ 7610 இலட்சம்) 9 சதவீதம் குறைவானதாக ரூ. 148,450 இலட்சத்தைப் (சிஎஉ 6550 இலட்சம்) பதிவுசெய்தது. மிக உண்மையான அமைப்பினை எடுத்துக்காட்டுவதற் காக சுங்கத்தரவைச் சீராக்கம் செய்தவிடத்து இறக்குமதிகளின் மீதான செலவினம் ரூ. 352,510 இலட்சத்துக்கும் (சிஎஉ 15,550 இலட்சம்) ஏற்றுமதிகளிலிருந்தான மொத்தவருவாய்கள் ரூ.205,850 இலட்சத்துக்கும் (சிஎஉ 9,080 இலட்சம்) வகைகூறி இவ்வாண்டில் ரூ. 146,660 இலட்சம் கொண்ட (சிஎஉ 6,470 இலட்சம்) வர்த்தகப் பற்றாக்குறை யொன்றை விளைவித்தன. இது முன்னைய ஆண்டின்சீராக்கப்பட்ட வர்த்தக பற்றாக்குறையான ரூ. 163,470 இலட்சத்துடன் (சிஎஉ 7,600 இலட்சம் ஓரளவுக்குச் சாதகமாக ஒப்பிடத்தக்கதாகும். 1981 இல் வர்த்தகக் கணக்கிலேற் பட்ட பாதகமான நிலுவைக்குப் பொறுப்பாக ஏற்றுமதிகளின் வளர்ச்சிவீதம் போதியதல்லாதிருந்தமையே முக்கிய காரணியாக இருந்தவேளையில், இறக்குமதிச் செலவினம் முன்னைய ஆண்டில் அடையப்பட்ட உயர்மட்டத்திலேயே நிலையாக இருந்தது.

இறக்குமதி விலைச்சுட்டெண்ணால் அளவிடப்பட்டவாறான இறக்குமதி களின் விலைகள் 1981 இல் 30 சதவீதத்தால் கணிசமான அளவில் அதிகரித்தவேளை யில் இறக்குமதிகளின் அளவுச் சுட்டெண்ணினால் அளவிடப்பட்ட இறக்குமதிகளின் அளவு சிறிதளவால் மட்டும் அதிகரித்தது. ஏற்றுமதிகளைப் பொறுத்தவரையில், அளவும், விலைகளும் சிறிதளவான அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. எனினும், இறக்குமதிகளிலும் ஏற்றுமதிகளிலும் ஏற்பட்ட தொடர்பான விலையசைவுகளின் தேறிய விளைவு மீளாய்வுக்குரிய ஆண்டில் நாட்டின் வர்த்தக மாற்று விகிதத்தில் 21 சதவீதங்கொண்ட வீழ்ச்சியைக் கொண்டிருந்தது. 1980, 1979 ஆகிய முன்னைய இரு ஆண்டுகளிலும் வர்த்தக மாற்றுவிகிதம் முறையே 19 சதவீதத்தாலும் 28 சத வீதத்தாலும் வீழ்ச்சியடைந்திருந்தது.

அட்டவணை 1.24

**வெளிநாட்டு வர்த்தகம் 1972 — 1981**

| ஆண்டு | ஏற்றுமதிகள் க. எ. பெ. | இறக்குமதிகளின் (ஆ) கொ.கா.க. | வர்த்தக நிலுவை | அளவு | | விலை | | வர்த்தக மாற்று விகிதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அனைத்து ஏற்றுமதிகளும் | அனைத்து இறக்குமதிகளும் | அனைத்து ஏற்றுமதிகளும் | அனைத்து இறக்குமதிகளும் | |
| 1972 | 2,009 | 2,064 | -55 | 102 | 67 | 17 | 18 | 94 |
| 1973 | 2,617 | 27,15 | -98 | 103 | 60 | 20 | 24 | 82 |
| 1974 | 3,471 | 4,554 | — 1,082 | 89 | 42 | 31 | 42 | 72 |
| 1975 | 3,933 | 5,251 | — 2,715 | 107 | 52 | 29 | 49 | 58 |
| 1976 | 4,815 | 4,645 | + 170 | 102 | 57 | 34 | 44 | 78 |
| 1977 | 6,638 | 6,007 | + 631 | 94 | 73 | 55 | 54 | 102 |
| 1978 | 13,206 | 14,687 | — 1,480 | 100 | 100 | 100 | 100 | 100 |
| 1979 | 15,273 | 22,560 | — 7.287 | 101 | 123 | 109 | 152 | 72 |
| 1980 | 17,273 | 33,637 | —16,364 | 99 | 140 | 126 | 217 | 58 |
| 1981 | 19,740 | 34,585 | —14,845 | 102 | 145 | 129 | 282 | 46 |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

(அ) மீள் ஏற்றுமதிகள் உட்பட

(ஆ) தங்கக் கட்டிகளும் நாணயங்களும் நீங்கலாக.

## ஏற்றுமதிகள்

*1981 இல் சீராக்கப்பட்ட தரவுகளின்படி ஏற்றுமதிகளின் வருவாய்கள் ரூ. 205,850 இலட்சமாக (சிஎஉ 9080 இலட்சம்) விளங்கி முன்னைய ஆண்டின் அளவினைவிட ரூபா நியதிகளில் ரூ. 29,900 இலட்சம் அல்லது 17 சதவீதம்( சி எ உ 900 இலட்சம் அல்லது 11 சதவீதம்) கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்தன. வேளாண்மை கைத்தொழில் ஏற்றுமதிகளின் வருவாய்கள்,ரூபா நியதிகளிலும் சிஎஉ நியதிகளிலும் பெருமளவான அதிகரிப்புக்களைப்பதிவுசெய்தவேளையில் கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள்வீழ்ச்சியைப்பதிவுசெய்தன. அண்மைக் காலங்களின் போக்கினைத் தொடர்ந்து மொத்தவருவாய்களில் வேளாண்மை ஏற்றுமதிகளின் பங்கு முன்னைய ஆண்டின் 62 சதவீதத்திலிருந்து 1981 இல் மேலும் வீழ்ச்சியடைந்து 59 சதவீதமாக விளங்கியது. மறுபுறத்தில் கைத்தொழில் ஏற்றுமதிகள்*

அட்டவணை 1.25

### ஏற்றுமதிகளின் உள்ளமைப்பு 1979 - 1981

| வகை | பெறுமதி பத்து இலட்சம ரூபாய்களில் (சிஎஉ பத்து இலட்சம் அடைப்பிறகுள்) | | | மொத்த ஏற்றுமதிகளின் சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 1979 | 1980 | 1981 | 1979 | 1980 | 1981 |
| 1. வேளாண்மை ஏற்றுமதிகள் ... | 10,737 (534) | 10,834 (503) | 12,078 (533) | 70.3 | 61.6 | 58.7 |
| 1.1 தேயிலை ... | 5,722 (284) | 6,170 (287) | 6,444 (284) | 37.5 | 35.1 | 31.3 |
| 1.2 இறப்பர் ... | 2,491 (124) | 2,590 (120) | 2,895 (128) | 16.3 | 14.7 | 14.1 |
| 1.3 தெங்கு உற்பத்திகள் ... | 1,699 (84) | 1,234 (57) | 1,438 (64) | 11.1 | 7.0 | 7.0 |
| 1.3.1 உள்ளீட்டு உற்பத்திகள் ... | 1,298 (65) | 754 (35) | 1,011 (45) | 8.5 | 4.3 | 4.9 |
| 1.3.2 ஏனையவை .. | 401 (20) | 480 (22) | 427 (19) | 2.6 | 2.7 | 2.1 |
| 1.4 சிறு வேளாண்மைப் பயிர்கள் (அ) ... | 825 (41) | 840 (39) | 1,301 (57) | 5.4 | 4.8 | 6.3 |
| 2. கைத்தொழில் ஏற்றுமதிகள் (அ) .. | 3,604 (179) | 5,485 (255) | 7,059 (311) | 23.6 | 31.2 | 34.3 |
| 2.1 புடவைகளும் ஆடைகளும் ... | 1,108 (55) | 1,814 (84) | 3,000 (132) | 7.3 | 10.3 | 14.6 |
| 2.2 பெற்றோலிய உற்பத்திகள் .. | 1,928 (96) | 3,122 (145) | 3,375 (149) | 12.6 | 17.7 | 16.4 |
| 2.3 ஏனையவை ... | 568 (28) | 549 (26) | 684 (30) | 3.7 | 3.2 | 3.3 |
| 3. கனிப்பொருள் ஏற்றுமதிகள் ... | 629 (31) | 798 (37) | 768 (34) | 4.1 | 4.5 | 3.7 |
| 3.1 இரத்தினக் கற்கள் ... | 494 (25) | 664 (31) | 634 (28) | 3.2 | 3.8 | 3.1 |
| 3.2 ஏனையவை ... | 135 (7) | 134 (6) | 134 (6) | 0.9 | 0.7 | 0.6 |
| 4. ஏனைய ஏற்றுமதிகள் ... | 309 (15) | 478 (22) | 680 (30) | 2.0 | 2.7 | 3.3 |
| மொத்த ஏற்றுமதிகள் (ஆ) ... | 15,279 (759) | 17,595 (818) | 20,585 (908) | 100 | 100 | 100 |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
அரச இரத்தினக் கற் கூட்டுத்தாபனம்.

(அ) தெரிந்தெடுக்கப்பட்ட விடயங்கள்.
(திருத்தப்பட்டது)

(ஆ) சீராக்கப்பட்டது.

தொடர்பான முக்கியத்துவம் அதிகரித்தது. இவ்வாண்டில் வேளாண்மை, கைத்தொழில் ஏற்றுமதிகளின் வீதம் 1980 இன் முறையே 1 சதவீதத்துடனும், 51 சதவீதத்துடனும் ஒப்பிடுகையில் 11 சதவீதமாயும், 29 சதவீதமாயும் இருந்தன. மொத்த வருவாயில் 4 சதவீதத்துக்கு வகைகூறும் கனிப்பொருள் ஏற்றுமதிகள் முன்னைய ஆண்டின் 27 சதவீத அதிகரிப்புக்கெதிராக 4 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தன. வேளாண்மை ஏற்றுமதிகளின் பிரிவில் தேயிலை, இறப்பர், தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள், சிறுவேளாண்மைப் பயிர்கள் ஆகியவற்றின் வருவாய்கள் அதிகரித்த வேளையில் தெங்கு துணை உற்பத்திகளின் ஏற்றுமதிகளின் பெறுமதி வீழ்ச்சியடைந்ததெனினும் தேயிலை ஏற்றுமதிகளின் பெறுமதி சிஎஉநியதிகளில் சிறிதளவால்வீழ்ச்சியடைந்தது.மொத்த ஏற்றுமதிகளில் மரபுரீதியானபெருந்தோட்டப் பயிர்த்துறையின் தொடர்பான முக்கியத்துவம் 1980 இன் 57 சதவீதத்திலிருந்து 1981 இல் 52 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. 1981 இல் பெற்றோலிய உற்பத்திகள் புடவைகள் ஆடைகள் ஆகியவற்றின் ஏற்றுமதி வருவாய்கள் மரபுரீதியாக நாட்டின் இரண்டாவதும், மூன்றாவதும் ஆன பெரும் வெளிநாட்டுச் செலாவணி உழைப்பாளர்களாகக் கணிக்கப்படும் இறப்பர் தெங்கு உற்பத்திகளின் வருவாய்களைவிட உயர்வாயிருந்தன. எவ்வாறாயினும் தேயிலை ஏற்றுமதிகள், ஏற்றுமதியில் முக்கியமான தனிப்பட்டதொரு விடயமாகத் தொடர்ந்தும் விளங்கியதுடன் ஏற்றுமதிகளின் மொத்தப் பெறுமதியில் 31 சதவீதத்திற்கு வகைகூறியது.

1981 இல் தேயிலை ஏற்றுமதிகளின் பெறுமதி ரூ. 64,440 இலட்சத்திற்கு வகைகூறி (சிஎஉ 2,840 இலட்சம்) ரூபா நியதிகளில் 4 சதவீதங்கொண்ட சிறிதளவான அதிகரிப்பைக் கொண்டிருந்தது. எனினும், உற்பத்தியிலும், கொழும்பு ஏலத்தில் விற்கப்பட்ட தேயிலையின் அளவிலும் அதிகரிப்புக் காணப்பட்டபோதிலும் தேயிலை ஏற்றுமதிகளின் அளவு முன்னைய ஆண்டின் 1,850 இலட்சம் கிலோகிராம்களிலிருந்து 1981 இல் 1,830 இலட்சம் கிலோகிராம்களாக சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. தேயிலை ஏற்றுமதிகளின் அளவு அண்மை ஆண்டுகளில் வீழ்ச்சியடைந்து வந்தபோதும் 1981இல் ஏற்றுமதிசெய்யப்பட்ட அளவு1974 இல் பதிவுசெய்யப்பட்ட ஆகக் குறைந்த ஏற்றுமதி அளவான 1,750 இலட்சம் கிலோகிராம்களை விட உயர்வாயிருந்தது. தேயிலை ஏற்றுமதிகளின் ஆகக்கூடிய அளவான 2,130 இலட்சம் கிலோகிராம்கள் 1975 இல் காணப்பட்டன. 1971 இல் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் சராசரி க. ஏ. பெ. விலை கிலோகிராமொன்றுக்கு ரூ. 35.14 ஆக (சிஎஉ 1.55) விளங்கி ரூபாநியதிகளில் 1980 இனதைவிட 5 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. கொழும்பு ஏலங்களில் விற்கப்பட்ட தேயிலையின் அளவு 12 சதவீதத்தால் 1980 இன் 1,780 இலட்சம் கிலோகிராம்களிலிருந்து 1981 இல் 1,990 இலட்சம் கிலோகிராம்களுக்கு அதிகரித்தது. இலண்டன் ஏலங்களில் விற்கப்பட்ட இலங்கைத் தேயிலையின் அளவு 1981 இல் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவில் 5 சதவீதத்தை மட்டுமே கொண்டிருந்தது. கொழும்பு ஏலங்களில் விற்கப்பட்ட தேயிலையின் ஒரு கிலோகிராமுக்கான சராசரி மொத்த விலை 1980 இன் ரூ. 18.33 இலிருந்து 1981 இல் ரூ. 18.10 ஆக சிறிதளவால் வீழ்ச்சியடைந்த வேளையில் இலண்டன் ஏலத்தில் விற்கப்பட்ட இலங்கைத் தேயிலையின் சராசரி மொத்த விலை ஸ்டேர்லிங் நியதிகளில் 3 சதவீதத்தால் 94 பென்சாக அதிகரித்தது. உள்ளீட்டுப் பொருட்களின் அதிகரித்துச்செல்லும் செலவுக்காக உற்பத்தியாளருக்கு நியாயமான இலாப எல்லையை வழங்கும் நோக்குடன் தொகையான தேயிலை, உறையிலடைக்கப்பட்ட தேயிலை, பச்சை தேயிலை ஆகியவற்றுக்கான ஏற்றுமதித்தீர்வைகள் கிலோகிராம் ஒன்றுக்கு முறையே ரூ. 2.50 ஆலும்'

ரூ. 4.00 ஆலும், ரூ. 2.50 ஆலும் குறைக்கப்பட்டபோதிலும் கொழும்பு ஏலத்தில் விலைகளின் அமைப்பின்மீது சாதகமான தாக்கமெதனையும் ஏற்படுத்தவில்லை. இவ்வாண்டின் மொத்த தேயிலை ஏற்றுமதிகளில் 82 சதவீதமானவை தொகை வடிவில் கப்பலேற்றப்பட்டன.

இறப்பர் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள் ரூ. 28,950 இலட்சத்துக்கு (சி எ உ 1,280 இலட்சம்) வகைகூறி, 12 சதவீத அதிகரிப்பைக் காட்டின. பெறுமதியிலேற்பட்ட அதிகரிப்புக்கு ஏற்றுமதிகளின் அளவிலேற்பட்ட அதிகரிப்பே ஓரளவு காரணமாக இருந்ததுடன் இவ்வதிகரிப்பின் தாக்கம் கஏபெ விலையில் 1980இன் கிலோகிறுமொன்றுக்கு ரூ. 21.42 இலிருந்து, 1981இல் ரூ. 21.84ஆக ஏற்பட்ட சிறிதளவான அதிகரிப்பினால் மேலும் வலுவாக்கப்பட்டது. இறப்பர் ஏற்றுமதிகளின் அளவு 1981இல் 120 இலட்சம் கிலோகிறும்களினால் ரூ. 1,330 இலட்சம் கிலோகிறும்களாக அதிகரித்தது. எனினும் மேற்கத்திய கைத்தொழில்மய நாடுகளிலும் ஐக்கிய அமெரிக்கநாடுகளிலும் காணப்பட்ட வர்த்தக மந்தத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட கேள்விக் குறைவிலிருந்தும் தோன்றிய பன்னாட்டுச் சந்தைகளின் விலைகளிலேற்பட்ட பெரும் வீழ்ச்சிகளின் காரணமாக இறப்பர் ஏற்றுமதியாளர் பெருமளவான இறப்பர் இருப்புக்கள் தேங்கியிருக்கும் பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டியிருந்தனர். 1981 இலிருந்து நடைமுறைக்குவந்த பன்னாட்டு இயற்கை இறப்பர் உடன்படிக்கை, இயற்கை இறப்பர் விலைகளின் உறுதிப்பாட்டின்மீது எவ்வித குறிப்பிடத்தக்க தாக்கத்தினையும் ஏற்படுத்தவில்லை. கொழும்பு சந்தையில் இறப்பரின் விலைகள் குறிப்பாக ஆர் எஸ் எஸ் தரங்களின் விலைகள் வீழ்ச்சியடைந்ததன் காரணமாக இறப்பர் சிறு உடைமையாளர்களுக்கு சந்தைப்படுத்தலில் கடும் பிரச்சினைகள் தோன்றின. இலங்கை - சீன இறப்பர் உடன்படிக்கையின்கீழ் சீனமக்கட் குடியரசினது இயற்கை இறப்பர் கொள்வனவுகள் கடந்த சில ஆண்டுகளில் வீழ்ச்சி அடைந்ததுடன் 1981ஆம் ஆண்டுக்கான உடன்படிக்கை முதல்நிலைக் குறிப்பு முன்னைய ஆண்டின் 30,000 மெற்றிக் தொன்களுக்கெதிராக 20,000 மெற்றிக் தொன்கள் கொள்வனவுக்கே இடமளித்தது.

ஏற்றுமதி செய்யப்பட்ட தெங்கு உற்பத்திகளின் பெறுமதி ரூ. 2,040 இலட்சத்தால் (சி எ உ 70 இலட்சம்) 1980இன் ரூ. 12,340 இலட்சத்திலிருந்து (சி எ உ 570 இலட்சம்) 1981இல் ரூ. 14,380 இலட்சமாக (சி எ உ 640 இலட்சம்) அதிகரித்தது. இது முற்றாக தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளின் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட ரூ. 2,570 இலட்ச அதிகரிப்பின் விளைவாகவே ஏற்பட்டதெனினும் இதன் தாக்கமானது தெங்கு துணை உற்பத்திகளின் வருவாய்களில் ஏற்பட்ட ரூ. 530 இலட்சங்கொண்ட வீழ்ச்சியினால் ஓரளவு எதிரீடு செய்யப்பட்டது. 1980 இல் தெங்குத் துறையில் காணப்பட்ட திருப்தியற்ற ஏற்றுமதிச் செயலாற்றம் திருப்தியாக மாற்றமடைந்ததுடன் 1981 ஓகத்தில் கட்டுப்பாடுகளை நீக்கியதிலிருந்து குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களைக் காட்டின. தெங்கு ஏற்றுமதிகளின் தாராளமாக்கலைத் தொடர்ந்து தேங்காய்த்துருவல், தேங்காயெண்ணெய், உலர்த்திய தேங்காய் போன்ற முக்கிய தெங்கு உற்பத்திகளின் ஏற்றுமதி அளவுகள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. காய்களுக்குச் சமமான நியதிகளில் தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளின் ஏற்றுமதிகளின் அளவு 1980இல் 2,390 இலட்சம் காய்களிலிருந்து 1981இல் 4,010 இலட்சம் காய்களாக அல்லது 67 சதவீதத்தால் கணிசமானளவில் அதிகரித்தது. சராசரி க. ஏ. பெ. விலைகளில் வீழ்ச்சிகள் ஏற்பட்டபோதிலும் தேங்காயெண்ணெய், தேங்காய்த்துருவல் ஆகியவற்றின் ஏற்றுமதி வருவாய்கள் 1981இல் அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. இவ்வாண்டில் தெங்கு துணை உற்பத்திகளின் விலைகள் சாதகமாக காணப்பட்ட போதிலும் பெரும்பாலும் வழங்கலிலேற்பட்ட தடைகாரணமாக ஏற்றுமதி அளவில் காணப்பட்ட குறைப்பினாலேயே உயர் ஏற்றுமதி விலைகளின் பயன்கள் பெறப்படவில்லை.

சிறு வேளாண்மைப் பயிர்களின் வருவாய்கள் ரூ. 13,010 இலட்சத்துக்கு (சி எ உ 570 இலட்சம்) வகைகூறி இவ்வாண்டில் ரூ. 4,610 இலட்ச அல்லது 55 சத வீதமான குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றினைக் காட்டின. கோப்பி, மிளகு, கறுவா, கராம்பு, சாதிக்காய், ஏலம், எள்ளு, ஏனைய எண்ணெய் விதைகள், வெற்றிலை, தயாரிக்கப்படாத புகையிலை, மரமுந்திரிப்பருப்பு ஆகியவற்றின் ஏற்றுமதி அளவுகள் அதிகரித்த வேளையில் பாக்கு, கொக்கோ உற்பத்திகள், பப்பாளிப்பால் மண்நிறம் ஆகியவற்றின் ஏற்றுமதி அளவுகள் வீழ்ச்சியடைந்தன. எனினும், இவ்வுற்பத்திகளின் ஏற்றுமதி விலைகள் சாதகமாகக் காணப்பட்டன.

கைத்தொழில் ஏற்றுமதிகளின் பெறுமதி ரூ. 54,850 இலட்சத்திலிருந்து (சிஎஉ 2,550 இலட்சம்) 1981இல் ரூ. 70,590 இலட்சமாக (சி எ உ 3110 இலட்சம்) விளங்கி ரூபா நியதிகளில் 29 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தது. அபிவிருத்தியடைந்த நாடுகளில் விதிக்கப்படும் அளவுப்பங்குக்கட்டுப்பாடு இருந்த போதிலும் புடவைகள், ஆடைகளின் ஏற்றுமதிப் பெறுமதி ரூ. 11,860 இலட்சங்கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்ததுடன் (சி எ உ 480 இலட்சம்) மொத்த ஏற்றுமதி வருவாய்களில் 15 சதவீதத்தினைக் கொண்டிருந்தது. கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் நோக்க எல்லையில் கீழ்வரும் தொழில் முயற்சிகளினது புடவை ஏற்றுமதிகள் ஏறக்குறைய ரூ. 7,750 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் பெற்றோலிய உற்பத்திகளின் முக்கியமாக நீர்க்கல எரிபொருள் வான்கல எரிபொருள், நப்தா, எரிபொருள் எண்ணெய் ஆகியவற்றின் ஏற்றுமதியிலிருந்து பெறப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி ரூ. 2,530 இலட்சத்தால் அதிகரித்தது. புடவைகள், ஆடைகள் ஆகியவற்றின் ஏற்றுமதியிலிருந்து பெறப்பட்ட வருவாய்கள் அண்மை ஆண்டுகளில் அதிகரித்துச்சென்ற போதிலும், தற்போதைய வளர்ச்சிவீதமானது, இறக்குமதி நாடுகளினால் விதிக்கப்படும் ஆடைகளின் மீதான அளவுப்பங்குக் கட்டுப்பாடுகள் காரணமாக எதிர்காலத்தில் தொடர்ந்தும் இல்லாமல் போகலாம். இவ்விரு விடயங்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் (ஆடைகளும், பெற்றோலிய உற்பத்திகளும்) குறிப்பிடத்தக்களவில் அதிகரித்து மொத்த ஏற்றுமதி வருவாய்களின் ஒருபெரும் பங்குக்குவகை கூறிய வேளையில் ஆடைகள் பெற்றோலியம் ஆகியவற்றின் ஏற்றுமதிகளின் இறக்குமதி உள்ளடக்கம் மிக உயர்வாக இருந்தது. இவ்வாறு இவ்வேற்றுமதிகளின் தேறிய வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் ஏனைய ஏற்றுமதிகளின் வருவாய்களைவிட (அதாவது வேளாண்மை கனிப்பொருள் ஏற்றுமதிகள்) மிகவும் குறைவாயிருந்தன. விலைகளிலும் அளவுகளிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் ஆடைகள், பெற்றோலிய உற்பத்திகள் ஆகியவற்றில் அதிகரித்த ஏற்றுமதி வருவாய்களுக்கு வகைகூறின. இவ்விரு விடயங்களைத் தவிர ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகளின் பெறுமதி ரூ. 6,840 இலட்சம் (சி எ உ 300 இலட்சம்) தொகை கொண்ட உயர்ந்த தேறிய வெளிநாட்டு செலாவணியை உள்ளடக்கியிருந்ததுடன் மொத்த ஏற்றுமதி வருவாய்களில் 3சதவீதத்திற்கு வகைகூறின.

கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் இவ்வாண்டில் ரூ. 300 இலட்சத்தால் அல்லது 4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ. 1,690 இலட்சங்கொண்ட பெருமளவான அதிகரிப்புக்கு மாறாக அரச இரத்தினக்கல் கூட்டுத்தாபனத்தினால் பதிவுசெய்யப்பட்டவாறு இரத்தினக்கற்களின் ஏற்றுமதிப் பெறுமதி ரூ. 300 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்ததுடன் கனிப்பொருள் ஏற்றுமதிகளின் வருவாய்களிலேற்பட்ட வீழ்ச்சிக்கும் இது வகைகூறியது. ஏனைய கனிப்பொருள் ஏற்றுமதிகளின் வருவாய்கள் 1981 இல் ரூ. 1,340 இலட்சமாக (சி எ உ 60 இலட்சம்) மாற்றமின்றியிருந்தன.

1981 இல் ஏற்றுமதித்துறையில் முழுமையான செயலாற்றம் ஓரளவுக்கு ஊக்கமளிப்பதாகவே காணப்பட்டது. தேயிலை தவிர்ந்த ஏனைய முக்கிய ஏற்றுமதிப் பண்டங்களின் ஏற்றுமதி அளவுகள் ஓரளவு வளர்ச்சியைக் காட்டின. புடவைகள் ஆடைகள் சிறு வேளாண்மை ஏற்றுமதிகள். ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் ஆகியவற்றின் அதிகரித்த ஏற்றுமதிவருவாய்கள் 1981 இல் ஏற்றுமதிகளின் சாதகமான வளர்ச்சி வீதத்துக்குப் பெருமளவில் பொறுப்பாயிருந்தன. இவ்வாண்டில் கைத்தொழில் ஏற்றுமதிகள் 29சதவீதத்தால் கணிசமான வீதத்தில் உயர்ச்சியடைந்தன. மறுபுறத்தில் இவ்வாண்டில் ரூபாநியதிகளில் ஏற்றுமதி வருவாய்கள் அதிகரித்தமைக்கு சில முக்கியமான நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபா தேய்வடைந்தமையே ஓரளவு காரணமாகும். பெரும்பாலான உற்பத்திகளின் ஏற்றுமதி விலைகள் பன்னாட்டுச் சந்தைகளில் சாதகமான அசைவினைக் காட்டிய போதிலும் உலகத்தின் பணவீக்க வீதத்துடன் இணங்கியதாகக் காணப்படவில்லை. இறக்குமதி விலைகள் இவ்வாண்டுகளில் ஏற்றுமதி விலைகளைவிட விரைவாக அதிகரித்து நாட்டின் வர்த்தகமாற்று விகிதத்தில் குறிப்பிடத்தக்களவில் மோசமான நிலைமையை விளைவித்தன. மேலும் இறக்குமதிகளுக்கான வளர்ந்து வரும் கேள்வி பேணப்படவேண்டின் ஏற்றுமதிகளின் வளர்ச்சி வீதத்தினை அதிகரிக்கச் செய்ய வேண்டியதொரு வலுவான தேவையை மரபுவழி ஏற்றுமதிகளின் ஆற்றலை முன்னேற்றுகின்ற அவ்வேளையில் பன்முகப்படுத்தல் மூலமாயும் மரபு ரீதியற்ற ஏற்றுமதிகளை பன்முகப்படுத்தல் மூலமும் அபிவிருத்தி மூலமும் அடையக் கூடியதாகவிருக்கும்.

இறக்குமதிகள்

1981 ஆம் ஆண்டுக்கான இறக்குமதிகளின் மொத்தச் செலவினம் (சீராக்கப்பட்ட தரவுகள்) ரூ. 352,510 இலட்சத்துக்கு (சிஎஉ 15,550 இலட்சம்) வகைகூறியது. 1980 இல் மொத்த இறக்குமதிகள் ரூ. 339,420 இலட்சமாக (சிஎஉ 15770 இலட்சம்) விளங்கியதுடன் ரூபா நியதிகளில் 4 சதவீத அதிகரிப்பையும் (சிஎஉ நியதிகளில் 1 சதவீதவீழ்ச்சி) காட்டின. இது குறிப்பிடத்தக்களவில் 1980 இன் 51 சதவீத அதிகரிப்புக்குமாறாக (சிஎஉ நியதிகளில் 41 சதவீதம்) காணப்பட்டது. இறக்குமதிகளின் பெறுமதியிலேற்பட்ட அதிகரிப்பு இறக்குமதி விலைச்சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறு இறக்குமதி விலைகளிலேற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பின் விளைவாகக் காணப்பட்ட வேளையில் இறக்குமதிகளின் அளவில் (இறக்குமதி அளவுச் சுட்டெண்ணினால் அளவிட்டபடி) சிறிய அதிகரிப்பொன்று காணப்பட்டது. கடந்த அண்மைக்காலங்களில் இறக்குமதிகளின் உள்ளடக்கத்தில் அவதானிக்கப்பட்ட அமைப்பு மாற்றமானது மீளாய்வின் கீழான ஆண்டில் தொடர்ந்தும் காப்பதுடன் இதில் பெரும்பங்கு மூலப் பொருள்களின் இறக்குமதியினால் ஈர்க்கப்பட்டது. முன்னைய ஆண்டினது போக்குகளைத் தொடர்ந்து மொத்த இறக்குமதிகளில் நுகர்வுப் பொருட்களின் பங்கு 30 சதவீதத்திலிருந்து 26 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. முதலீட்டுப் பொருட்களின் பங்கு ஓராண்டின் முன்பு 24 சதவீதத்திலிருந்து 23சதவீதமாக சிறிதளவால் வீழ்ச்சியடைந்த வேளையில் இடை நிலைப் பொருட்களின் பங்கு 46சத வீதத்திலிருந்து 51சத வீதத்திற்கு அதிகரித்தது. இடை நிலைப்பொருட்களின் மீதான செலவினத்திலேற்பட்ட அதிகரிப்புக்கு பிறிமா ஆலையின் தொடக்கத்துடன் இறக்குமதிகள், கோதுமை மாவிலிருந்து (நுகர்வுப் பொருளாகப் பகுக்கப்பட்டவை) கோதுமைத் தானியத்துக்கு மாற்றம் அடைந்தமையும் (இடை நிலைப் பொருளாகப் பகுக்கப்பட்டமை) மசகெண்ணெயின் விலையில் மேல் நோக்கி ஏற்பட்ட திருத்தங்களின் விளைவாக பெற்றோலிய இறக்குமதிகளின் செலவினத்திலேற்பட்ட விரைவான அதிகரிப்புமே ஓரளவுக்குக் காரணமாகும்.

1981 இல் பொருட்களின் இறக்குமதிகளின் பெறுமதி ரூ. 79,560 இலட்சமாக (சி எ உ 3510 இலட்சம்) விளங்கி முன்னைய ஆண்டின் ரூ. 81,440 இலட்சத்திலிருந்து (சி எ உ 3790 இலட்சம்) 2சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. பொறி, கருவி ஆகியவற்றின் இறக்குமதிகளின் செலவினம் முதலீட்டுப் பொருட்களின் மொத்தச் செலவினத்தில் ஏறக்குறைய அரைவாசிப்பங்கிற்கு வகைகூறிய வேளையில் போக்குவரத்துக் கருவிகளும் கட்டிடப் பொருட்களும் குறிப்பிடத்தக்க பங்குகளுக்கு வகை கூறின. முதலீட்டுப் பொருட்களின் வகையில் பொறியும் கருவியும், போக்குவரத்துக்கருவி ஆகியவற்றின் இறக்குமதிகள் ஒவ்வொன்றும் 8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த வேளையில் கட்டடப் பொருட்கள் 14சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. எனினும் ஏனைய முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதியில் குறிப்பிடத்தக்கதொரு அதிகரிப்புக் காணப்பட்டது.

இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி 1980 இல் ரூ. 155,220 இலட்சத்திலிருந்து (சிஎஉ 7210 இலட்சம்) 1981 இல் ரூ. 1,799,440 இலட்சமாக விளங்கி (சிஎஉ 7920 இலட்சம்) 16 சதவீதங்கொண்ட கணிசமான அதிகரிப்பொன்றைக் காட்டியது. மொத்த இறக்குமதிகளில் இடைநிலைப் பொருட்களின் பங்கு 1980 இன் 46 சதவீதத்திலிருந்து 1981 இல் 51 சதவீதமாக அதிகரித்தது. முன்பு கூறப்பட்டது போல ஓரளவுக்கு உள்ளூர் அரைத்தலுக்கான கோதுமைத் தானியத்தின் இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பின் விளைவேயாகும். எனினும் கோதுமைத்தானியம் தவிர்ந்த ஏனைய இடைநிலைப் பொருட்கள் 1981 இல் தமது பங்கினை அதிகரித்தன. பெற்றோலிய இறக்குமதிகளின் மீதான செலவு 7 சதவீதத்தால் ரூ. 80,900 இலட்சத்திலிருந்து (சிஎஉ 3760 இலட்சம்) ரூ. 86,270 இலட்சமாக (சிஎஉ 3810 இலட்சம்) அதிகரித்த வேளையில் வளமாக்கி மீதான செலவு ரூ. 13,390 இலட்சத்திலிருந்து (சிஎஉ 620 இலட்சம்) ரூ. 12,020 இலட்சமாக (சிஎஉ 530 இலட்சம்) 10 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

முழுமையான நியதிகளில் முன்னைய ஆண்டில் அதிகரிப்பொன்றைக்காட்டிய நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிச் செலவு 1980 இல் ரூ. 101,580 இலட்சத்திலிருந்து (சிஎஉ 4720 இலட்சம்) 1981 இல் ரூ. 92,190 இலட்சமாக (சிஎஉ 4070 இலட்சம்) 9 சதவீதங்கொண்ட வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. இவ்வகையின் தொடர்பான பங்கு மொத்த இறக்குமதிகளிலும் 30 சதவீதத்திலிருந்து 26 சதவீதமாக வீழ்ச்சியடைந்ததற்கு கோதுமைமா, பால் உற்பத்திகள், உணவு விடயங்கள், மருத்துவ, மருந்தாக்க உற்பத்திகள் ஆகியவற்றின் இறக்குமதிகளிலேற்பட்ட வீழ்ச்சி காரணமாயிருந்த வேளையில் அரிசி, சீனி, புடவை, துணிவகைகள் ஆகியன குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. எனினும் கோதுமை மா தவிர்ந்த ஏனைய நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி 1981 இன் மொத்த இறக்குமதிகளின் தமது தொடர்பான பங்கைப் பேணிக்கொண்டன.

அப்புறப்படுத்தப்படும்போது கொடுப்பனவு மாதிரிகளின் அடிப்படையில் சுங்கப் பகுதியினால் இறக்குமதிகள் வகைப்படுத்தப்படாமையினால் உதவி இறக்குமதிகளுக்கான தனியான பதிவு கிடைக்கவில்லை. எனினும் வெளிநாட்டு உதவிப் பங்கீடுகளில் கிடைக்கத்தக்க தரவுகளின் அடிப்படையில் மொத்த இறக்குமதிகளின் கணிசமான பங்கிற்கு வகைகூறும் உதவி இறக்குமதிகளை மேலெழுந்தவாரியாக மதிப்பிடலாம். [1]இவ்வடிப்படையில் 1981 ஆம் ஆண்டுக்கான உதவி இறக்குமதிகள் 1980இன் ரூ. 47,020 இலட்சத்துடனொப்பிடுகையில் (சிஎஉ 2190 இலட்சம்) ரூ. 59,340 இலட்சம் (சிஎஉ 2610 இலட்சம்) என மதிப்பிடப்பட்டன. மொத்த இறக்குமதிகளின் சதவீதப்படி உதவி இறக்குமதிகளின் பங்கானது 1980 இன் 14 சதவீதத்திலிருந்து 1981 இல் 17 சதவீதமாக அதிகரித்தது.

1 உதவி இறக்குமதிகளின் பெறுமதி செயற்றிட்ட உதவியின் 75 சதவீதத்தையும், பண்ட உதவியின் முழுமையையும் உணவு உதவியையும், பநாநி பொறுப்பாண்மை நிதியக் கடன்களையும் சேர்த்துக் கொள்வதனாலேயே பெறப்பட்டது.

அட்டவணை 1.26

## இறக்குமதிகளின் முடிவுப் பயன்பாட்டுப் பகுப்பு 1979 — 1981

| வகை | பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில் | | | சி. எ. உ. பத்து இலட்சம் | | | மொத்த இறக்குமதிகளின் சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1979 | 1980 | 1981 | 1979 | 1980 | 1981 | 1979 | 1980 | 1981 |
| 1. நுகர்வுப் பொருட்கள் ... | 7,814 | 10,158 | 9,219 | 388.4 | 472.1 | 406.7 | 34.7 | 29.9 | 26.2 |
| 1.1 உணவும் குடிவகையும் ... | 4,797 | 6,408 | 4,888 | 238.4 | 297.8 | 215.6 | 21.3 | 18.9 | 13.9 |
| 1.1.1 அரிசி ... | 891 | 882 | 992 | 44.3 | 41.0 | 43.8 | 3.9 | 2.6 | 2.8 |
| 1.1.2 மா ... | 1,667 | 1,825 | 28 | 82.8 | 84.8 | 1.2 | 7.5 | 5.4 | 0.1 |
| 1.1.3 சீனி ... | 936 | 2,026 | 2,826 | 46.5 | 94.2 | 124.7 | 4.1 | 6.0 | 8.0 |
| 1.2 புடவையும் துணிவகையும் ... | 1,536 | 1,721 | 2,334 | 76.3 | 80.0 | 103.0 | 6.8 | 5.1 | 6.6 |
| 1.3 ஏனையவை ... | 1,481 | 2,029 | 1,997 | 73.6 | 94.3 | 88.1 | 6.6 | 6.0 | 5.7 |
| 2. நடுத்தரப் பொருட்கள் ... | 9,134 | 15,522 | 17,944 | 454.0 | 721.4 | 791.6 | 40.5 | 45.7 | 50.9 |
| 2.1 பெற்றோலியம் ... | 3,912 | 8,090 | 8,627 | 194.4 | 376.0 | 380.6 | 17.3 | 23.8 | 24.5 |
| 2.2 வளமாக்கி ... | 664 | 1,339 | 1,202 | 33.0 | 62.3 | 53.0 | 3.0 | 3.9 | 3.4 |
| 2.3 இரசாயனம் ... | 502 | 544 | 663 | 25.0 | 25.3 | 29.2 | 2.2 | 1.6 | 1.9 |
| 3. முதலீட்டுப் பொருட்கள் ... | 5,459 | 8,144 | 7,956 | 271.3 | 378.5 | 351.0 | 24.2 | 24.0 | 22.6 |
| 3.1 பொறிகளும் கருவிகளும் ... | 2,900 | 4,212 | 3,876 | 144.1 | 195.8 | 171.0 | 12.9 | 12.4 | 11.0 |
| 3.2 போக்குவரத்துக் கருவிகள் ... | 1,615 | 2,421 | 2,229(ஆ) | 80.3 | 112.5 | 98.3 | 7.1 | 7.1 | 6.3 |
| 3.3 கட்டிடப் பொருட்கள் ... | 368 | 610 | 525 | 18.3 | 28.4 | 23.2 | 1.6 | 1.8 | 1.5 |
| 4. பகுக்கப்படாதவை ... | 134 | 118 | 132 | 6.7 | 5.5 | 5.8 | 0.6 | 0.3 | 0.4 |
| மொத்த இறக்குமதிகள் (அ) ... | 22,541 | 33,942 | 35,251 | 1,120.3 | 1,577.5 | 1,555.1 | 100.0 | 100.0 | 100.0 |

(அ) சீராக்கப்பட்டது.

(ஆ) வான்கல இறக்குமதிப் பெறுமதியான ரூ. 374.5 இலட்சங்களை (ஏறத்தாள சி.எ.உ. 170 இலட்சம்) உள்ளடக்கம். இது சுங்க அறிக்கைகளில் பதிவு செய்யப்படவில்லை.

மூலம்: இலங்கைச் சுங்கம்,
உணவு ஆணையாளர் திணைக்களம்,
இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனம்,
இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்.

அட்டவணை 1.27

முக்கிய இறக்குமதிகளின் அளவு — 1981

(மெற்றிக் தொன்கள்)

| மாதம் | அரிசி | கோதுமை | சீனி | பெற்றோலியம் | வளமாக்கி |
|---|---|---|---|---|---|
| சனவரி ... ... | 20,625 | 75,575 | 4,276 | 170,656 | 26,584 |
| பெப்புருவரி ... ... | 1,150 | — | 24,511 | — | 10,605 |
| மாச்சு ... ... | 33,708 | 1,292 | 11,001 | 161,746 | 74,385 |
| ஏப்பிறல் ... ... | 27,467 | 37,004 | 10,618 | — | 5,203 |
| மே ... ... | — | 36,729 | 34,401 | 60,275 | 25,874 |
| யூன் ... .. | 7,919 | 37,820 | 60,718 | 159,958 | 18,575 |
| யூலை ... ... | 10,906 | 33,500 | 17,990 | 96,012 | 8,035 |
| ஓகத்து .. | 10,395 | 74,200 | 13,153 | 197,683 | 20,009 |
| செத்தெம்பர் ... ... | 24,874 | 60,424 | 14,981 | 188,672 | 36,595 |
| ஒத்தோபர் ... | 7,916 | 77,658 | 19,145 | 213,998 | 32,049 |
| நவெம்பர் ... | — | 18,000 | 21,815 | 29,413 | 5,670 |
| திசெம்பர் ... .. | 5,000 | 57,747 | 5,100 | — | 18,613(அ) |
| மொத்தம் (ஆ) | 148,960 | 509,949 | 237,711 | 1,521,507 | 282,198 |

(அ) சீராக்கம் மூலம்: இலங்கைச் சுங்கம்

(ஆ) பிற்பட்ட சுங்கச் சீராக்கங்களின் காரணமாக மாதாந்த தரவுகள் ஆண்டு மொத்தத்திற்கு சேர்க்கப்படுவதில்லை.

1981 இல் இறக்குமதிகளின் ஒரு அடிப்படைப் பண்பு, இறக்குமதிகளின் அளவில் பிரதிபலிக்கப்பட்டவாறு இறக்குமதிகளின் வளர்ச்சி படிப்படியாக விரைவான அதிகரிப்புக்களின் பின் சிறிதளவான அதிகரிப்பை மட்டுமே பதிவுசெய்தது, நிலையாக இருந்த கோதுமை மா தவிர்ந்த நுகர்வுப் பொருட்கள், இடைநிலைப் பொருட்கள் ஆகியவற்றின் சார்புரீதியான பங்குகளில் ஏற்பட்ட அதிகரிப்பும் முதலீட்டுப் பொருட்களில் காணப்பட்ட வீழ்ச்சியும் உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைக்கு ஆதரவளிக்குமுகமாக மூலப்பொருள் இறக்குமதிக்கு வழிப்படுத்தப் பட்ட கூடுதலான நிதிகளின் பலனாக ஏற்பட்ட சாதகமான அபிவிருத்தியை ஊகிக் கக்கூடியதாகவுள்ளது. மொத்தத் தொகைப் பெறுமானத் தேய்வின் மீளப் பெறுகை வெளிப்படையாகவே பொறி இறக்குமதிகளின் அளவைக் குறைத்தது.

### வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை

வர்த்தக தாராளமாக்கல் நடைமுறையின் நான்காவது ஆண்டாகிய 1981 இல் நாடு மிகவும் உறுதியான வெளிநாட்டு வர்த்தக நிலைமையை நோக்கிச் செல்லும் அறிகுறிகளைக் காட்டியது. 1977 இல் அறிமுகப்படுத்தப்பட்ட வர்த்தகத் தாராள மாக்கல் கொள்கைகளின் தொடர்ச்சி பொருளாதாரத்தில் வளர்ச்சி ஆற்றலைப் பேணுவதற்கான மிகமுக்கிய தேவையாகக் காணப்படுகின்றது. குறுங்காலத்தில் இறக்குமதிகளுக்கும், ஏற்றுமதிகளுக்கும் இடையிலான இடைவெளிகளை நிரப்பு வதற்கு வெளிநாட்டு மூலவளங்கள் பயன்படுத்தும்வேளையில் நடுத்தரக் காலத்தி லிருந்து நீண்ட காலம்வரை திடமான பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான இறக்குமதிகளை நிதியீட்டுவதற்காக ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதில் அபிவிருத்தி வழிமுறையே பயன்படுத்தப்பட்டது. இது தொடர்பான நாணயக் கொள்கை, இறைக்கொள்கை, செலாவணிவீதக் கொள்கை போன்ற முக்கிய பெரும்பாக பொருளியல் கொள்கை வழிமுறைகள் ஒருபுறத்தில் ஏற்றுமதிகளை அதிகரிப்பதற் கான ஊக்குவிப்புக்களை உருவாக்குவதிலும், மறுபுறத்தில் இறக்குமதிகளின் திட மான மட்டத்தினைப் பேணுவதிலும் பயன்படுத்தப்பட்டன.

நாட்டின் வர்த்தக நடவடிக்கைகளின் மட்டத்தினை நிர்ணயிக்கும் அளவு கோல்களில் ஒன்றாகவிளங்கும், கொடுகடன் கிடைக்கக்கூடிய தன்மையை ஏற்படுத்தியமை 1981 இல் நாட்டின் பொருளாதாரக் கொள்கையின் முக்கிய பண்பாகவிருந்தது. முன்னுரிமைத்துறைகளுக்குக் கிடைக்கக்கூடிய கொடுகடனை வழிப்படுத்துவதில் மத்திய வங்கி ஆற்றலுடன் செயலாற்றியது. ஐந்து முன்னுரிமைத்துறைகள் தவிர, கொடுகடனை வழங்குவதில் கட்டுப்பாட்டினை மேற்கொள்ளும்படி வர்த்தக வங்கிகள் வேண்டப்பட்டதுடன் இவற்றில் ஏற்றுமதி நிதியீட்டல் முன்னுரிமையில் முதலாவது இடத்தைப்பெற்றது. ஏற்றுமதிகளின் ஊக்குவிப்பு அபிவிருத்தி ஆகியன தொடர்பான செயற்றிட்டங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களுக்காக வர்த்தக வங்கிகளுக்கும், ஏனைய கொடுகடன் நிறுவனங்களுக்கும் 10 சதவீத, 11½ சதவீத வட்டியுடன் மத்திய வங்கி 100 சதவீத மீள்நிதியிடலை வழங்கியது. மேலும் வர்த்தக வங்கியின் கடன் வழங்கல் வீதங்களிலேற்பட்ட ஓரளவு கூரிய அதிகரிப்புக்களைப் பொறுத்தவரையில், கடன் வழங்கல் மீது வர்த்தக வங்கிகள் 16 சதவீதங்கொண்ட நியாயமான கடன் வழங்கல் வீதத்தினைப் பேணுவதற்காக 12 சதவீதமான வட்டிவீதத்தில் கப்பலேற்றுவதற்கு முன்னான மீள் நிதியிடலுக்கு ரூ. 5,300 இலட்சம் கொண்ட தொகை வழங்கப்பட்டது. வங்கித் தொழில் முறையிலிருந்து கிடைக்கக்கூடிய மொத்தக் கொடுகடனில் ஆகக்கூடிய சதவீதப்பங்கான 17 சதவீதம், 1981 இல் ஏற்றுமதி வர்த்தகத்துக்காக வழங்கப்பட்டது. இறக்குமதிகளைப் பொறுத்தவரையில் மூலதனப் பொருட்கள், மூலப்பொருட்கள், இன்றியமையாத நுகர்வுப் பொருட்கள் ஆகியவற்றின் நிதியீட்டலுக்கு முன்னுரிமை வழங்கும்படி வங்கிகள் வேண்டப்பட்டன.

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச்சபை, (இஏஅச) ஏற்றுமதி ஊக்குவிப்புக்கான முதன்மை நிறுவனமாக தனது நடவடிக்கைகளைத் தொடர்ந்தது. இதன் முக்கிய நடவடிக்கைகள் ஏற்றுமதி வழங்களிலான தடைகளையறிதல், ஏற்றுமதிப் பணிகளை வலுப்படுத்தல், ஏற்றுமதிகளின் அபிவிருத்திக்கான ஊக்குவிப்பு, உதவி ஆகியவற்றை வழங்குதல் போன்றனவாகும். ஏற்றுமதி அபிவிருத்தி அமைச்சர்கள் கழகம், அகழ்வு, பதனிடல், கனிப்பொருள் மூலப்பொருட்களின் ஏற்றுமதி ஆகியவற்றின் அரசதுறையின் தனியுரிமையை முடிவடையச் செய்யும் நோக்குடன் தனியார்துறையை இதில் ஈடுபடுத்த அனுமதிவழங்கத் தீர்மானித்தது. 1979 இன் எண் 40 கொண்ட இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தினால் வேண்டப்பட்டபடி தேசிய ஏற்றுமதி அபிவிருத்தி திட்டமொன்றைத் தயாரிப்பதற்காக அரச, தனியார்துறைப் பிரதிநிதிகளைக் கொண்ட மதியுரைக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. இச்சபையானது ஏற்றுமதி அபிவிருத்தி நிதியத்தின் மூலவளங்களைப் பயன்படுத்தி ஏற்றுமதி அடிப்படையிலான எட்டு செயற்றிட்டங்களின் பங்கு மூலதனத்தில் அத்தகைய செயற்றிட்டங்களுக்கான மூலவளங்களைத் திரட்டுவதில் உதவும் நோக்குடன் பங்குபற்றுவதெனத் தீர்மானித்தது. 1981 மார்ச்சு 1 இலிருந்து, முழு ஏற்றுமதி வர்த்தகத்தையும் இலகுவாக்குவதற்காக ஏற்றுமதி ஆவணச் சான்று முறையானது எளிதாக்கப்பட்டது. புதிய சுங்கத்தீர்வைத் தள்ளுபடித் திட்டத்தில் அதனை மேலும் வலுவாக்குவதற்காக நடைமுறை சார்ந்த பல திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. முடிவாக்கப்பட்ட 463 கூற்றுக்களின் அடிப்படையில் ரூ. 270 இலட்சம் பெறுமதியான தொகை கொண்ட ஏற்றுமதி விரிவுக் கொடைகள் செலுத்தப்பட்டன. குடியரசுத்தலைவரின் ஏற்றுமதி விருதுகள் திட்டமும், மிகத்திறமையான செயலாற்றங்களுக்காக ஏற்றுமதியாளர்களுக்கு தகுதிப் பத்திரங்கள் வழங்குதலும் தொடக்கிவைக்கப்பட்டன. வர்த்தகத்திற்கும் அபிவிருத்திக்குமான ஐக்கிய நாடுகளின் மாநாடு (அங்ராட்) இனதும் தீர்வை வர்த்தகத்தின் மீதான பொது உடன்படிக்கை (கற்) இனதும் உதவியுடன் 7 சிறப்பு உற்பத்திப் பிரதேசங்கள் தெரிவு செய்யப்பட்டு

ஏற்றுமதி அபிவிருத்திக்கும், ஊக்குவிப்புக்குமான உதவி வழங்கப்பட்டது. இது ஆபரணங்கள், வெள்ளிக் கயிற்றுத்தும்பு, மண்ணிறத்தும்பு, கைத்தறி உற்பத்திகள், இறப்பருற்பத்திகள், தேயிலை உறைகளும் பெட்டிகளும், கடல் உற்பத்திகள், தோட்டஉற்பத்திகள் ஆகியவற்றையுள்ளடக்கும். ஏற்றுமதி ஊக்குவிப்புக்கானதொரு நிறுவன ரீதியான ஆதரவாக, வர்த்தகக் கப்பற்றுறை அமைச்சின் கீழ் வர்த்தக கப்பற்றுறைத் தகவற் பணியொன்று நிறுவப்பட்டது. கிராம மட்டத்தில் ஏற்றுமதிக்கான உற்பத்திக் கோட்பாடு தம்பதெனியா தேர்தல் தொகுதியிலுள்ள மாதிரி ஏற்றுமதிக் கிராமத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு செயல் விளக்கமளிக்கப்பட்டது. இக்கிராமம் 1981 இல் ஏறக்குறைய ரூ. 145,000 பெறுமதியுடைய வெற்றிலை, நாணற்புல்லினுல் செய்யப்பட்ட தேயிலைப்பெட்டிகள் ஆகியவற்றை ஏற்றுமதிசெய்தது.

1981 இல் இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (இஏகொகாகூ) ஏற்றுமதிக் கொடுகடனை உத்தரவாதப்படுத்தல், காப்புறுதி செய்தல் ஆகியன வாயிலாக ஏற்றுமதி ஊக்குவிப்பு முயற்சியில் தொடர்ந்தும் பங்கெடுத்தது. மீளாய்வின் கீழான ஆண்டில் ரூ. 1,040 இலட்சம் பெறுமதிக் கொண்ட65 காப்புறுதிப் பத்திரங்களும், ரூ. 2,550 இலட்சம் பெறுமதிக்கொண்ட 109 உத்தரவாதங்களும் வழங்கப்பட்டன. இது ஏற்றுமதியாளர்கள் புதிய சந்தைகளுக்கும் புதிய வாங்குநர்களுக்கும் பொருட்களை கப்பலேற்றுவதை கொடுகடன் நியதிகளின்படி தற்போதுள்ள வாடிக்கையாளருக்கு ஏற்றுமதிகளை அதிகரிக்கச் செய்வதையும் இயலச் செய்தது. உள்நாட்டு இறைவரிச்சட்டத்தின் கீழ் ஏற்றுமதியாளருக்கு வழங்கப்பட்ட ஊக்குவிப்பு 1981ஆம் ஆண்டிலும் தொடர்ந்தது. இவை இலாபங்கள், குறிப்பிட்ட சில ஏற்றுமதி நடவடிக்கைகளின் வருமானம் ஆகியன மீதான வருமானவரியிலிருந்து வரிவிடுப்பு, வரி விலக்கு ஆகியவற்றையும் ஏற்றுமதி முயற்சிகளின் பங்குகளில் முதலீடு செய்தோருக்கான சலுகைகள் ஆகியவற்றையும் உள்ளடக்கும் தயாரிக்கப்பட்டவிடயங்களுக்கு ஏற்றுமதிகள் மொத்த விற்பனவு வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

1981இல் தெங்கு தவிர்ந்த ஏனையவற்றுக்கான ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுக் கொள்கையில் குறிப்பிடத்தக்க மாற்றமெதுவும் இருக்கவில்லை. எல்லா முக்கிய ஏற்றுமதிகளும் கட்டுப்பாடுகளிலிருந்து விலக்களிக்கப்பட்ட வேளையில், ஆண்டின் தொடக்கத்தில் உரிய முறைக்குட்படுத்தப்பட்ட 18விடயங்களுடன் சேர்ந்து மேலோட்டுடன் கூடிய மரமுந்திரிப் பருப்பின் ஏற்றுமதி மட்டும் உரிமமுறையின் கீழ் கொண்டுவரப்பட்டது. எனினும் சில ஏற்றுமதிகள் மட்டும் ஏற்றுமதிக்கு முன்னுன தரப்பரிசோதனைக்குட்பட்டனவாகும். இவ்வாண்டில் இறப்பர் ஏற்றுமதி வர்த்தகத்தில் தனியார் துறையில் அதிகளவு பங்கேற்புக்காணப்பட்டது. தேயிலை மீதான ஏற்றுமதித் தீர்வை தொகைத் தேயிலைக்கு 1981 நவெம்பரில் கிலோகிருமொன்றுக்கு ரூபா 10.50இலிருந்து ரூபா 8.00ஆகவும், உறைகளில் அடைக்கப்பட்ட தேயிலைக்கு ரூபா 8.50இலிருந்து ரூபா 6.50ஆகவும் குறைக்கப்பட்டதன் நோக்கம் உற்பத்தியாளரை சிறந்த இலாபத்தைப் பெறச் செய்யஉதவுவதேயாகும். அத்துடன் அதிகரித்துச்செல்லும் உற்பத்திச்செலவைப் பொறுத்தவரை தேயிலைஉற்பத்தியாளருக்கு நிவாரணம் வழங்குவதற்காக பெறுமான விகித விற்பனை வரியின் வரி விதிப்பு மட்டம் 1981 மார்ச்சிலிருந்த மாதாந்த சராசரி விலையான கிலோகிருமொன்றுக்கான ரூபா 16.00இலிருந்து 1981 நவெம்பரில் ரூபா 22.00 ஆக இருமுறை திருத்தப்பட்டதுடன் வரி விதிப்பு வீதம் 20 சதத்திலிருந்து 35 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது. கிலோகிருமொன்றுக்கு 25சதவீதங்கொண்ட வரி விதிப்பில் ஏற்பட்ட அதிரிப்பை ஓரளவு எதிரீடு செய்வதன் மூலம் ஆண்டு தொடக்கத்தில் மிகவும் உயர்மட்டத்திலிருந்த ஒன்று சேர்ந்த இருப்புக்களின் ஏற்றுமதிகளை

ஊக்குவிக்கும்பொருட்டு இறப்பர் மீதான ஏற்றுமதித் தீர்வைகள் இருமுறைதிருத் தியமைக்கப்பட்டன. இவ்வாண்டில் தேங்காய்த் துருவல் ஏற்றுமதிகளின் மீதான தீர்வை தொன்னென்றுக்கு ரூபா 6,450 இலிருந்து ரூபா 3,500 ஆகக் குறைக்கப் பட்டதுடன் தேங்காயெண்ணெய் மெத்தைத்தும்பு ஆகியவற்றின் மீதான ஏற்று மதித் தீர்வைகள் முற்ருக நீக்கப்பட்ட வேளையில் பன்னட்டுச் சந்தை விலைகளி லேற்படும் மாற்றங்களுக்குத் தானகவே ஈடுகொடுக்கும் வகையில் எல்லாத் தெங்கு உற்பத்திகளினதும் ஏற்றுமதி மீது படிப்படியாக அதிகரித்து செல்லும் தீர்வைகள் நவெம்பரில் அறிமுகப்படுத்தப்பட்டன. மேலும் தெங்கு உற்பத்திகளின் மீதான நிருவாகத் தீர்வையும் நீக்கப்பட்டது.

குறைந்து செல்லும் விலைகள், அதிகரித்துச் செல்லும் உற்பத்திச் செலவு கள் காணப்பட்ட நிலைமையில் உற்பத்தியாளருக்கு உதவுவதற்கு இக் குறைப் புக்கள் அவசியமாகக் காணப்பட்டன. எனினும் அதிகரித்துச் செல்லும் உற் பத்திச் செலவுகளின் காரணமாக தீர்வைக் குறைப்பில் ஏற்படும் நலனில் தங்கியிருப்பதனைவிட ஏற்றுமதி முயற்சியின் உற்பத்தித் தன்மையிலேயே கூடிய அவதானம் செலுத்தப்படவேண்டியது முக்கியமாகும். சிறப்பாக உற்பத்தியாளர் களிடையே திடமான புன்னட்டு ஒத்துழைப்பை ஏற்படுத்தி எமது ஏற்றுமதிப் பண்டங்களின் விலைகளில் ஏற்படும் பெருமளவு வீழ்ச்சிகளைக் கட்டுப்படுத்த நட வடிக்கைகளை மேற்கொள்வது இன்றியமையாததாகும்.

வருவாயை உயர்த்துதல், உள்ளூர்க் கைத்தொழில்களுக்குப் பாதுகாப்பளித் தல் ஆகிய இருபெரும் நோக்கங்களை அடையும் பொருட்டு 1981 ஆம் ஆண்டுக் காலத்தில் இறக்குமதித் தீர்வைகள் 5இலிருந்து 500சத வீதம் வரையிலான அளவு களில் நடைமுறையிலிருந்தன. எனினும் இவ்வாண்டுக் காலத்தில் புகையிலை, குடி பானம், மின்கொதிகலங்கள் போன்ற இன்றியமையாதனவல்லாத பொருட்கள், கூரைத்தகடுகள், பசைத்தீந்தைகள், துத்த நாகம் பூசப்பட்டபொருட்கள், கூரை ஓடுகள் போன்ற கட்டிடப் பொருட்கள் மீதான இறக்குமதித் தீர்வைகள் மேல் நோக்கித் திருத்தப்பட்டன. மறுபுறத்தில் மின் உருவாக்கல் பிரச்சனைகளிலிருந்து விடுபடல், முக்கிய பொது மக்கள் தொடர்புச் சாதனமாகத் தொலைக்காட்சிப் பெட்டியைப் பிரபலப்படுத்தல் போன்றவற்றின் நோக்கில் மின் உருவாக்கிகள் இணைக்கப்படாத உதிரிப்பாகங்களான தொலைக்காட்சிப் பெட்டிகள் போன்ற சில விடயங்கள் தீர்வையின்றி இறக்குமதி செய்யப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டன. குடியரசுத் தலைவரின் தீர்வை ஆணைக்குழு பொருத்தமான தீர்வை அமைப்பில் விதந் துரைப்புக்களைச் செய்யும் ஒரு மதியுரைக் குழுவாகத் தொடர்ந்துமிருந்தது.

தற்போது இறக்குமதி தீர்வையின் அமைப்பு 1977 ஆம் ஆண்டின் கடைசிப் பகுதியில்மேற்கொள்ளப்பட்ட தாராளமயமாக்கல்நடவடிக்கைகளிற்கு முன்1977ஆம் ஆண்டில் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட பயிற்சிகளின் விளைவேயாகும் இதிலிருந்து தற்போதைய வரி அமைப்பினுல் பாதிக்கப்பட்ட கைத்தொழிலின் பாதுகாப்பிற்கான தேவையையும் அதன் விளைவையும் மதிப்பிடும் எத்தகைய ஆய்ந்தறிந்த எத்தனங்களும் எடுக்கப்பட்டதாகத் தெரியாமையால் இதன் விளை வாக முக்கியத்துவம் கொடுக்கப்படாத பிரதேசங்களின் முதலீடுகள் தொடர்ந் தும் ஆதரவளிக்கப்பட்டு வளங்களின் பிழையான ஒதுக்கீட்டிற்கு வழிகாட்டியது. இதன் காரணமாக செயல் திறனுடைய பாதுகாப்பு மட்டங்களின் அடிப்படை யில் ஆய்ந்தறிந்து செய்யப்பட்ட ஒரு வரியமைப்பு முறையை உருவாக்கும் செயல் மிகவும் அத்தியாவசியமானதாகக் கருதப்படவேண்டியுள்ளது.

தற்பொழுதிருக்கின்ற தீர்வை அமைப்புடன் குழந்தைப்பாலுணவு,வளமாக்கி, மசகெண்ணெய் தயாரித்து ஏற்றுமதி செய்வதற்காக இறக்குமதி செய்யப்படு கின்ற பொருட்கள் தவிர்ந்த அனைத்து இறக்குமதிகளின் மீதும் 1981ஆம் ஆண் டில் மொத்த விற்பனை வரி விதிக்கப்பட்டது. இவ்வரி அறிமுகப்படுத்தப்பட்ட தன் நோக்ககம் இறக்குமதி செய்யப்படுகையில் விதிக்கப்படும் இறக்குமதித் தீர் வையின் வருவாய்க் கூறு உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பொருள் விற்கப்படும் பொழுது அறவிறப்படும் மொத்த விற்பனை வரியினளவினதாக இருப்பதை உறுதிப் படுத்துவதேயாகும். இறக்குமதி செய்யப்படும் பொருளில் கொடுபடற்பாலதான சுங்கத்தீர்வை உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருளுக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பின் அளவின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் புதிய மொத்த விற் பனை வரியின் மீது விதிக்கத்தக்க மூன்று அடிப்படை வீதங்களாவன 2சதவீதம், 5 சதவீதம், 10சதவீதம் என்பனவாகும். வேளாண்மைத் தொழில் சம்பந்தப்பட்ட இறக்குமதிகள், கட்டிடப் பொருட்கள், உணவுப்பொருட்கள், மீன்பிடி வள்ளங் கள், பருத்திப்புடவைகள், பெற்றோலியப் பொருட்கள், மருந்துப் பொருட்கள் மற்றும் உற்பத்திப் பொருட்கள் (தற்போது ஒரு சதவீத மொத்த விற்பனை வரிக்கு உட்பட்டவை) என்பனவற்றின் மீது 2சதவீத தாழ்மட்ட வீதத்தில் வரி விதிக்கப்பட்டன. இறக்குமதிகளில் புதிய மொத்த விற்பனை வரியை அறி முகப்படுத்தியதோடு பொறிகள், மூலப்பொருட்களின் மீதான சுங்கத் தீர்வை 12½சதவீதத்திலிருந்து 5சதவீதத்திற்கு கீழ்நோக்கி மாற்றியமைக்கப்பட்டது. ஏற்று மதி அபிவிருத்தி வரி தொடர்ந்தும் இறக்குமதிகளின் மீதும் தெரிந்தெடுக்கப் பட்ட ஏற்றுமதிகளின் மீதும் விதிக்கப்பட்டது.

இவ்வாண்டு காலத்தில் இலங்கை தேயிலைச் சபையின் சில நிருவாக ஒழுங்கு கட்கு அமைய கலப்பதற்கு தேயிலையை இறக்குமதி செய்தல், ஏற்றுமதிக்காக மட்டும் உறையிடுதல், உறைகள் தயாரித்தல் என்பன விரிவுபடுத்தப்பட்டன. இதைத் தொடர்ந்து ரூ. 13 இலட்சம் பெறுமதியான (அலகு பெறுமதி 1கிலோ கிராமிற்கு ரூ. 30.24) 44,000 கி. கிராம் தேயிலைகள் இறக்குமதி செய்யப்பட்டன. பல பத்தாண்டுகளாக அரச தனியுரிமைக்குட்பட்டிருந்த அரிசி, சீனி இறக்கு மதி 1981 இல் தனியார் துறைகளிற்கும் திறந்து விடப்பட்டது. இறக்குமதி தீர்வைகள் செலுத்துவதிலிருந்து அரச இறக்குமதிகள் தவிர்க்கப்பட்டிருந்ததை 1983இலிருந்து நீக்கும் நோக்கத்தையும் அரசு அறிவித்தது. உல்லாசப்பயணிகள், இராச தந்திரிகள், அபிவிருத்தித் திட்டங்களில் தொழிலில் ஈடுபட்டிருக்கும் வெளிநாட்டவர்கள், உள்நாட்டிற்கு வரும் இலங்கையில் வதிவோர் ஆகியோரின் நன்மைக்காக கொழும்பில் ஒரு தீர்வையற்ற விற்பனை நிலையம் திறக்கப்பட்டது.

1981 ஆம் ஆண்டின் மூன்று கலத்துறைகளிலும் 2,358 மெற்றிக் தொன்கள் இறக்குமதிச் சரக்குகளும், 1342 மெற்றிக் தொன்கள் ஏற்றுமதிச் சரக்குகளும் கையாளப்பட்டன. கையாளப்பட்ட மொத்த சரக்குகளில் ஏறத்தாழ 18 சத வீதமானவை கொள்கலன்களிலடைக்கப்பட்டவையாகும். கொள்கலன்களி லடைக்கப்பட்ட சரக்குகளைக் கையாள்வதற்காக கொழும்பு கலத்துறையில் முன் னேற்றமான வசதிகள் செய்துகொடுக்கப்பட்டன.

பன்னாட்டு அரங்கில் இலங்கைதான் அங்கத்துவம் வகிக்கும் பன்னாட்டு இயற்கை இறப்பர் ஒப்பந்தத்தின் அடிப்படை தாங்கிருப்பு நிதியத்திற்கு உதவு தொகை அளித்தது. உடன்படிக்கையின் நியதிப்படி வருட முடிவில் தாங்கிருப்பு நிர்வாகி சந்தையில் நுழைந்து ஓரளவு விலைஆதரவு வழங்கினார். இவ்வாண்டுக் காலத்தில் ஐக்கியநாடுகளின் வர்த்தக அபிவிருத்தி மாநாட்டு நிறுவனத்தின் ஆதரவில் தேயிலை விலைகளை நிலைப்படுத்துவதற்கான வேறு உடன்பாடுகளை ஏற்படுத்தக்கூடிய இயல்பு களைகவனிப்பதற்கு இலங்கை உட்பட தேயிலை ஏற்றுமதி நாடுகள் பலமுறை கூடின

1981 இல் இலங்கை பன்னாட்டு கோப்பி உடன்படிக்கையில் அங்கம் வகிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது. இலங்கை சீன வர்த்தகக் கொடுப்பனவுகள் உடன்படிக்கை 1981 இலும் நடைமுறையிலிருந்தது. இவ்வுடன்படிக்கை விதிகளின்கீழ் ஏற்று மதிகள், இறக்குமதிகள் சம்பந்தப்பட்ட தீர்ப்பனவுக் கணக்குகளினூடாக வழிப் படுத்தப்பட்டன. ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தினூடாக வழிப்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல் நடவடிக்கையினது மொத்தப் பெறுமதி ரூ. 43,560 இலட்ச மாக இருந்த முந்திய ஆண்டிலும் பார்க்க ரூ. 11,680 இலட்சம் அதிகரிப்பைக் காட்டியது.

உள்நாட்டு வர்த்தகம்

1977 இல் தாராளமயமாக்கல் நடவடிக்கைகளின் அறிமுகப்படுத்தலிலிருந்து ஒரு பொதுக் கொள்கையாக விளங்கிவரும் "கட்டுப்பாடற்ற சந்தை" பொருளா தாரத்தை நோக்கி படிப்படியாக அணுகுவதே 1981 இல் உள்நாட்டு வர்த்தகக் கொள்கையின் முக்கிய குறிக்கோளாக இருந்தது. வர்த்தகத்திற்கு வழிகாட்ட சந்தை விசைகள் அனுமதிக்கப்பட்ட வேளையில் நுகர்வோரைப் பாதுகாக்க கட்டுப் பாடற்ற போட்டி எதிர்பார்க்கப்பட்டது. எனினும் வாங்குபவருக்கும், விற்பனை யாளருக்குமிடையில் அல்லது நுகர்வோருக்கும் உற்பத்தியாளருக்கும் இடையி லான நுணுக்கமான இறக்குமதி சமநிலையைப்பேணுவதற்கு முக்கியமாக உள்நாட்டு வர்த்தகத்திணைக்களம், தேசிய விலைகள்ஆணைக்குழு ஆகியவற்றினூடாக பொருளா தாரத்தில் திறந்த சந்தை நடவடிக்கைகள்மீது நிலையான கூரிய கண்காணிப்பு பேணப்பட்டது. தேசியளவில் ஏற்றுக்கொள்ளத்தக்க விதத்தில் வித்தியாசமான விருப்பங்களைப் பாதுகாப்பதற்குத் திடமான கட்டுப்பாடுகளில் ஆனால் தாங்கிருப் புத்தொழிற்பாடுகள், நுகர்வுத் தொழிலாற்றல் தடை ஆகியவற்றை முன்னேற்று தல், நெறிமுறைகளை இணங்குவித்தல் முதலியன போன்ற கட்டுப்பாடற்ற சந் தைக் கருவிகளினூடாகஆகக்குறைந்த சந்தை ஈடுபாடுகள் மேலாண்மை பெற்றோரி னால் நடைமுறைப்படுத்தப்பட்டன. பன்னாட்டு விலைகள், கேள்வி, வருவாய் நிலைமைகளுடன் கூடியளவு உண்மையானதாக விலைகள் அசையத் தொடங்கின. எனினும் விலைகளிலுள்ள அசைவுகள் வெவ்வேறு வருவாய் வகுப்புக்களை வித்தியாச மாகத் தாக்கின. வர்த்தகத்திலும் உற்பத்தியிலும் தனியுரிமையைப் படிப்படியாக மீளப்பெறுவது தொடர்ந்திருந்ததுடன் அரசு, தனியார்துறை நிறுவனங்களிற் குள்ளும் அவற்றிற்கிடையேயும் அதிகளவு போட்டியான சூழலொன்றும் உருவாக் கப்பட்டது. அரசு துறை நிறுவனங்களைப் பொறுத்தவரையில் மாறும் சூழலில் தொடர்ந்தும் நிலைப்பதற்கு அதிக ஆற்றல் மிக்கதும் மாற்றத்தக்கதுமான கொள் கைகள் அவசியமானவையெனவும் கட்டுப்பாடுகளினால் உதவப்பட்டாலன்றி திற மையின்மை தொடர்ந்திருக்க முடியாதெனவும் இக்கொள்கை நிரூபித்துக் காட்டியுள்ளது.

பொருளாதாரத்தின் வர்த்தக நடவடிக்கைகளை வழிகாட்டுவதற்கு கட்டுப் பாடற்ற சந்தை விசைகள் அனுமதிக்கப்படும்போது விரும்பத்தக்க போட்டியை முன்னேற்றவும் வேறுபட்ட விரிவுகள் அல்லது விருப்பங்களால் சந்தை விசைகளை தவறான வழியில் செலுத்தும் முயற்சிகளைத் தடுப்பதற்கும் ஒருவகை நிறுவக ஒழுங்குமுறை அமைப்பு முக்கியமாகின்றது. திடமான கட்டுப்பாட்டு முறையின் கீழ் தற்காலிக பெரு நன்மைக்காக கட்டுப்பாடற்ற சந்தையை அழிக்கக்கூடியவர் களாக இருந்த வர்த்தகர்களை சில காலங்களுக்கு மேற்பார்வையின் கீழ்வைக்கப்பட வேண்டியவர்களாவார்கள். மேலும் ஏற்றுக்கொள்ள முடியாத வர்த்தக நடை முறைகளை அவை எழும்போதே நீக்குவதற்கு சட்ட வழிமுறைகள் இருக்க வேண்டும். ஏற்றுக்கொள்ள முடியாத வர்த்தக நடைமுறைகளை நீக்கும்

நோக்கத்துடனும் நியாயமானதும்சமனானதுமானதொரு வழங்கலின் பகிர்ந்தளிப்புகளைப் பேணுவதற்கும் உள்நாட்டு வர்த்தக திணைக்களம் நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம், விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்; நிறுத்தலளவை முகத்தலளவைச் சட்டம் போன்றவற்றை நடைமுறைப்படுத்தியது. நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் ஏற்பாடுகளை பயன்படுத்தக்கூடிய பொருள்களின் எண்ணிக்கை 325 ஆக அதிகரித்த வேளையில் சிறுவர் பாலுணவில் விளம்பரத்தினைத் தடைசெய்தல் உட்பட பல அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன. நுகர்வோர் தெளிவாற்றலை ஊக்குவிப்பதுடன் வர்த்தகத்தில் ஒழுங்கீனங்களைக் கட்டுப்படுத்தவும் 1250 ற்கும் அதிகமான நுகர்வோர் அமைப்புக்கள் ஆண்டு இறுதியில் நிறுவப்பட்டன. எனினும் சட்டமீறல்களுக்கெதிராக நீதிமன்றங்களில் 2000 இற்கும் மேற்பட்ட வழக்குகள் பதியப்பட்டன. இதே வேளை கோதுமைமா, பாண், சீனி, பருப்பு, பாலுணவுகள், சிறுவர் தானிய உணவுகள் போன்ற ஒன்பது முக்கிய நுகர்வோர் விடயங்கள் தொடர்ந்தும் விலைக்கட்டுப்பாட்டின்கீழ் இருந்தன. இவ்வாண்டுக் காலத்தில் நுகர்வோர் பாதுகாப்பு நிதியத்தில் வரவு வைக்கப்பட்ட ரூ. 140,000 நுகர்வோர் கல்வித் திட்டத்திற்கு நிதியிடுவதற்கு பயன்படுத்தப்படவிருந்தது. கடந்த ஆண்டுகளைப் போலவே நுகர்வோர் கல்வி நிலையங்கள் கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் இடையிலே தொடர்பினை ஏற்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட மகாபொல வர்த்தகச் சந்தைகளில் நிறுவப்பட்டன.

நுகர்வோர் தேவைகளை பாதுகாப்பதற்காக குறிப்பாக உற்பத்தியில்லாக் காலங்களில் ஏற்படும் தற்காலிக தட்டுப்பாட்டை நீக்க வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு போன்ற குறிப்பிட்ட முக்கிய நுகர்வுப் பொருள்களை கட்டுப்படுத்தப்பட்ட அளவில் அரச நிறுவனங்களாலும் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டது. முக்கிய நுகர்வுப் பொருட்களின் கிடைக்கும் தன்மையையும் அளவிடுவதற்கு வாராந்த சந்தை அளவீடுகள் மத்திய வங்கியாலும் உள்நாட்டு வர்த்தகத் திணைக்களத்தினாலும் தொடர்ந்து நடாத்தப்பட்டுவருகின்றது.

வர்த்தகத்தின் தாராளமயமாக்கப்பட்ட திட்டத்தின் கீழ் அரச வர்த்தகக் கூட்டுத்தாபனங்கள் தனியுரிமை நிலையத்தின் கீழ் தொழிற்படும் நடைமுறையிலிருந்து விலகி வர்த்தக ரீதியாக நிலைக்கத்தக்க கொள்கைகளை மேற்கொள்ளவும் தனியார்துறையினருடன் போட்டியிடவும் எதிர்பார்க்கப்பட்டன. கூட்டுத்தாபனங்கள் மிகவும் குறிப்பிட்ட நடவடிக்கைகளில் ஈடுபடவே தொடக்கத்தில் நிறுவப்பட்டனவாயினும் அண்மைய ஆண்டுகளில் அவை சிலவற்றின் நடவடிக்கைகள் பன்முகப்படுத்துவதற்கு கட்டாயப்படுத்த நேர்ந்ததன் விளைவாக தொடர்புபடுத்தப்படாமை, திட்டமிடப்படாமை, அபிவிருத்தி சிக்கனமற்ற விளைவுகள் போன்ற சில விளைவுகள் ஏற்பட்டன. புதிய பொருளாதாரச் சூழலின் கீழ் இசைவான முறையில் தொழிற்படுவது தொடர்ந்தும் இருந்ததால் இந்நிறுவனங்களில் எதிர்காலத் தொழிற்பாட்டு நிலையின் மீது மிகவும் சரியான தீர்மானங்கள் எடுக்கப்படவேண்டும். 1981 இறுதியில் இக் கூட்டுத்தாபனங்கள் பலவற்றின் மொத்த செயலாற்றம் திருப்தியானதாக இல்லை. அநேகமாக எல்லாக் கூட்டுத்தாபனங்களும் முக்கியமாக தனியார்துறையிலிருந்தான போட்டி காரணமாக குறைந்த வருவாயையே பதிவுசெய்தன. எனினும் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது 1981 இல் வங்கிகளிலிருந்தான கொடுகடன் கிடைத்தலின் மீதான கட்டுப்பாடுகளும் மொத்த வருவாயைப் பாதித்திருக்கும். இதேவேளை பல கூட்டுத்தாபனங்கள் இறக்குமதி வர்த்தகத்தில் மட்டுமே ஈடுபடுவதிலும் பார்க்க ஏற்றுமதி சார்ந்த நடவடிக்கைகளை நோக்கி மாறுவதன் முக்கியத்துவத்தை உணர்துள்ளன, எடுத்துக்காட்டு கூ. மொ. வி. நிலையம். உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் கொள்வனவின் மீதும் அதிகளவு முக்கியத்துவம் செலுத்தப்படுகின்றது.

1981 இல் கூட்டுத்தாபனங்கள் மிகவும் உண்மையான விலையிடுதல் கொள்கைகளை மேற்கொள்ள முயற்சித்தபோதும் தனியார்துறையின் விலையிடல் கொள்கைகளுடன் நோக்குகையில் அரசதுறை குறைந்த கவர்ச்சியுள்ளதாக காணப்பட்டது. தற்காலிக மதிப்பீடுகளின்படி பதினொரு கூட்டுத்தாபனங்களும் மொத்த விற்பனவாக ஏறத்தாழ ரூ. 46.400 இலட்சம் கொண்டிருந்ததோடு ஏறத்தாழ 15,000 பேருக்கு தொழில் வாய்ப்பையும் அளித்தன.

இலங்கையின் உள்நாட்டு வர்த்தக அமைப்பு முறையில் கூட்டுறவுச் சங்கங்களின் முக்கிய பங்கு இரண்டாம் உலக யுத்தத்தின் பின் முக்கியமானதொன்ருக விளங்கியது. அண்மையில் கடந்த காலங்களில் இச் சங்கங்களின் நடவடிக்கைகளும், தொழிற்பாடுகளும் மாறியிருந்தும்கூட தாழ்ந்த நடுத்தர வருவாய் வகுப்பிலுள்ள நுகர்வோர்கள் தங்கள் நாளாந்த தேவைகளின் வழங்கலின் முக்கிய மூலமாக இவற்றையே இன்னமும் பயன்படுத்துகிறுர்கள். வர்த்தக நடவடிக்கைகளில் மட்டும் கூட்டுறவுச் சங்கங்களின் வருவாய் 1978 இன் ரூ. 28,080 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில் 1981 இல் ரூ. 98,700 இலட்சங்களுக்கு அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விநியோகத்தில் தனியார்துறையின் பங்குபற்றலில் குறிப்பிட்ட அதிகரிப்பு ஏற்பட்டிருந்தபோதும் இவ்வதிகரிப்பு ஏற்பட்டது. இதேவேளையில் 1981 இல் ரூ. 15,100 இலட்சமாக விளங்கிய உணவு முத்திரைத்திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்ட விடயங்களின் பெரும்பகுதியை கூட்டுறவுத்துறை கையாண்டது. எனினும் இந்தக் காலப்பகுதியில் கூட்டுறவுத்துறையிலுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை சிறிதளவு வீழ்ச்சியைக் காட்டி ஏறத்தாழ 41,000 இல் இருந்தது. ஏறத்தாழ கூட்டுறவுச் சங்கங்களின் 700 மொத்த விற்பனை நிலையங்களும் 9,000இற்கு மேற்பட்ட சில்லறை விற்பனை நிலையங்களும் நாடு முழுவதிலும் பரவியிருந்தன. மத்திய வங்கி அளவீட்டினை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீடுகளின்படி கூட்டுறவுத்துறை முழுமையாக 1981 இல் அதன் கொள்வனவுச் செலவின் மேலாக 4 சதவீத இலாபத்தைக் கொடுத்தது.

அண்மைய ஆண்டுகளில் அரிசி, மா, சீனி உட்பட அத்தியாவசிய உணவுப் பொருள்களின் வழங்கலில் தனியார்துறை அதிகளவு பங்குபற்றுவதைத் தூண்டுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. 1981 இறுதியளவில் தனியார்துறை உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசியின் பெரும்பகுதியைக் கையாளுவதற்கு இயலக்கூடியதாக இருந்ததோடு அரிசி இறக்குமதி வர்த்தகத்திலும் நுழைந்தது. எனினும் மாவின் வழங்கல் உணவு ஆணையாளர் திணைக்களத்தின் (உ.ஆ.தி) தனியுரிமையாகவே தொடர்ந்தும் இருந்துவந்தது. பிறிமா ஆலையின் செயற்படுத்தலோடு உ.ஆ.தி. மாவுக்குப்பதிலாகக்கோதுமை தானியத்தை உள்ளூரிலேயே அரைக்கப்பட்டு வழங்குவதற்காக இறக்குமதி செய்தது. இதே வேளையில் சீனி வர்த்தகம் குறிப்பிடத்தக்க மாற்றத்திற்குள்ளானது. உ.ஆ.தி யின் பல பத்து ஆண்டுகால தனியுரிமையின் பின்பு 1981 இல் சீனியின் இறக்குமதியிலும் வழங்கலிலும் தனியார்துறைக்கு அதிக அளவில் பங்குபற்றஅனுமதிக்கப்பட்டதுடன் உ.ஆ.திக்கு இது நடைமுறையில் சில பிரச்சினைகளை உருவாக்கியது. கொழும்பு வடக்கு கூட்டுறவுச் சங்கம் இதில் முக்கிய பங்கை வகித்ததோடு 1981 இல் அதன் வருவாயை ரூ. 4,260 இலட்சங்களுக்கு அதிகரிக்கவும் முடிந்தது.

மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் தகவல் சேவை சந்தை ஒன்றின் அவசியம் உள்நாட்டு வர்த்தகத்தின் எல்லாத்துறையினராலும் உணரப்பட்டது. இறக்குமதிகள், இருப்பு முகாமைத்துவம், பன்னுட்டு விலைகளும் அவற்றின் போக்குகளும்,

சந்தையின் அளவு போன்றவை தொடர்பாக நிறுவனத்தில் கொள்கை வகுப்போருக்கு வழிகாட்டுவதற்கானதொரு அத்தகைய சேவை; வர்த்தக கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், உணவு ஆணையாளர் திணைக்களம், தனியார்துறை ஆகியவற்றின் தொழிற்பாட்டின் திறமையை முன்னேற்ற உதவியாக இருக்கும்.

**சுற்றுலாத்துறை**

சுற்றுலாத்துறையானது சென்ற பத்து ஆண்டுகளில் அவதானிக்கப்பட்டுள்ள போக்கினைத் தொடர்ந்து 1981 ஆம் ஆண்டிலும் வெளிநாட்டுச் செலாவணியைப் பெறுவதிலும், தொழில் வாய்ப்பினை உருவாக்குவதிலும் தொடர்ந்தும் முக்கியமானதொரு மூலமாக விளங்கிவருகின்றது.

1981 ஆம் ஆண்டில் பன்னாட்டுச் சுற்றுலாப் பயணத்தர்களின் வருகைகள் 370,742 ஆக அமைந்து, 1980 இல் பதிவுசெய்யப்பட்டுள்ள எண்ணிக்கையைவிட 15 சதவீத அதிகரிப்பைக் காட்டின. ஆயினும், சென்ற ஐந்து ஆண்டுகளின் செயலாற்றத்துடன் ஒப்புநோக்குகையில் 1981இல் அவதானிக்கப்பட்டுள்ள சுற்றுலாப் போக்குவரத்தின் வளர்ச்சி வீதத்தில் குறிப்பிடத்தக்கதோர் வீழ்ச்சி ஏற்பட்டது. 1981 ஆம் ஆண்டில் வருகைதந்த இன்பப்பயணிகளின் (அதாவது நாட்டில் 24 மணித்தியாலங்களுக்குக் குறைவாகத் தங்கும் தற்காலிக வருகையாளர்களையும் கடற்சுற்றுலாப் பயணிகளையும் உள்ளடக்கி ஆனால் இடைப்போக்கிலுள்ள பயணத்தர்களை நீக்கி) எண்ணிக்கை 7,737 ஆக விளங்கி, சென்ற ஆண்டு அளவிலும் 10 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது.

சுற்றுலாப் போக்குவரத்தின் அளவினை மதிப்பிடும் சிறந்த அளவு கோலாக அமையும் சுற்றுலாப் பயணத்தர்கள் தங்கும் இரவுகளின் எண்ணிக்கை 1981 இல் 40 இலட்சமாக அமைந்து 13 சதவீத ஆண்டு வளர்ச்சி வீதத்தைக் காட்டுகின்றது. மீளாய்விற்குரிய ஆண்டில் சுற்றுலாப்பயணத்தர்கள் தங்கிய இரவுகளின் வளர்ச்சி வீதம் சென்ற ஐந்து ஆண்டுகளில் ஆண்டுதோறும் பெறப்பட்ட தொடர்பான வீதங்களைவிடக் குறைவுற்று விளங்கியதுபோல் தோன்றுகின்றது. இதன் விளைவாக ஒரு சுற்றுலாப்பயணி தங்கும்காலப்பகுதியின் சராசரி அளவும் 1980 இல் 11.0 இலிருந்து 1981 இல் 10.8ஆகக்குறைந்தது.

சுற்றுலாப் பயணிகள் நாட்டில் தங்குவதற்கான வசதி, உணவு, போக்குவரத்து பல்வேறு விடயங்களின் கொள்வனவு, பொழுதுபோக்கு நடவடிக்கைகள் போன்ற செலவுகளை உள்ளடக்கும். சுற்றுலாவிலிருந்து பெறப்படும் மொத்த வருவாய்கள் மீளாய்விற்குரிய ஆண்டில் * ரூ. 25,000 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டு வருவாய்களின் அளவைவிட 36 சதவீத அதிகரிப்பைக் காட்டுகின்றது. சுற்றுலாமூலம் பெறப்பட்ட மொத்த வருவாய்கள் ஐக்கிய அமெரிக்கடொலர்களில் 1,300 இலட்சமாக விளங்கி 17 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. சிஎஉ நியதிகளில் இவை 30 சதவீத அதிகரிப்பைக் காட்டி 1980 இல் 850 இலட்சத்திலிருந்து 1981 இல் 1,100 இலட்சமாக உயர்வுற்றன.

கடந்த காலத்தைப் போலவே மேற்கத்திய ஐரோப்பாவே தொடர்ந்து 1981 இலும் முக்கிய சந்தையாக அமைந்து மொத்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் 66 சதவீதத்திற்கு வகை கூறியது. இரண்டாவது ஆகப்பெரிய சந்தையாகிய ஆசிய சந்தை மொத்த வருவாய்களில் 24 சதவீதம் கொண்ட பங்கினை வைத்திருந்து சென்ற ஆண்டின் தனது பங்குடன் ஒப்பிடுகையில் 2 சதவீத அதிகரிப்பைக்காட்டுகின்றது. வட அமெரிக்காவின் சந்தைப் பங்கு 1981இல் 4சதவீதமாக விளங்கியது.

* சுற்றுலாச் சபையினால் மதிப்பிடப்பட்டவாறு